**மன்னார் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 30 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்னார் நகரசபையிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1,918,389 ஆன ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் முற்றாக விடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 54,446,893 மூலதனச் செலவுகளில் ரூபா 40,562,875 பெறுமதியானவை நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லையாதலால் சொத்துக்கள் ரூபா 40,562,875 ஆல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த 03 கணனி மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிராமையால் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 இணக்கம் காணப்படாத வேறுபாடுகள்

சபையின் புத்தகங்களின் பிரகாரம் ஓய்வூதியப்பங்களிப்புத் தொகையாக ரூபா 3,761,548 ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,004,647 எனக் காட்டப்பட்டமையால் ரூபா 2,756,901 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதிகள் | | |
| (i) | விதி 178(3) | - | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்ப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 218 | - | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் செயலாளரினால் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | |
| | நிதி ஒழுங்குவிதி 571 | 88,443 | 23 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 03 தொடக்கம் 33 ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்குநேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 9,194,743 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 12,896,804 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

--------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம்<br>ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம்<br>ரூபா | சேகரிப்பட்ட வருமானம்<br>ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறன மொத்த நிலுவைகள்<br>ரூபா | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம்<br>ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம்<br>ரூபா | சேகரிப்பட்ட வருமானம்<br>ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறன மொத்த நிலுவைகள்<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீதவரிகள் | 415,000 | - | 199,484 | (215,516) | 319,000 | - | 313,232 | (5,768) |
| வாடகைகள் | 9,114,600 | - | 9,187,230 | 72,630 | 4,301,652 | - | 8,850,411 | 4,548,759 |
| உரிமங்கள் | 1,439,500 | - | 1,716,450 | 276,950 | 1,222,900 | - | 1,528,415 | 305,515 |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 550,800 | - | 593,379 | 42,579 | 1,239,900 | - | 820,793 | (419,107) |
| பற்றாணைச் செலவுகள் | 1,429,000 | - | 3,248,451 | 1,819,451 | 6,933,000 | - | 1,767,220 | (5,165,780) |
| ஏனைய வருமானங்கள் | 6,520,060 | - | 8,272,062 | 1,752,002 | 4,798,183 | - | 5,449,827 | 651,644 |

### 2.2.2 வாடகைகள்

----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 113 குத்தகை மற்றும் வாடகைதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை மற்றும் வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,866,119 இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜேசிபி, மோட்டர் கிரேடர் மற்றும் றோட் றோலர் என்பவற்றினை பல்வேறு அரச திணைக்களங்கள், சங்கங்கள், ஆலயங்கள் மற்றும் சபைகளுக்கு வாடகைக்கு வழங்கியதன் பிரகாரம் அறவீடு செய்ய வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 102,700 பெறுமதியான வாடகை நிலுவைகளினை அறவீடு செய்யவதற்கு நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காது அதற்கென ஒதுக்கப்பட்டவற்றில் 15 சதவீதமான தொகை வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தலைமன்னார் துறை, பேசாலை மற்றும் திருக்கேதீஸ்வரப் பகுதிகள் சுற்றுலாத் துறையை மிகவும் கவருகின்ற பகுதிகளாகக் காணப்பட்ட போதிலும் அவ்விடங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாத்துறை மூலம் வருடாந்தம் கிடைக்கக்கூடிய வருமானங்களின் மீது சபையானது அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.2.1 விளைவற்ற/ குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தலைமன்னார் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டு சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த விலங்கு அறுமனையினைப் பயன்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த பொது நூலகமானது நாளதுவரை பொது மக்களின் பயன்பாட்டுக்கேற்றதாக்கப்படடிருக்கவில்லை.

(இ) தலைமன்னார் கடைத் தொகுதியில் 03 கடைகள் வாடகைக்குவிடப்படாமல் மூடிய நிலையில் காணப்படுகின்றது.

### 3.2.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுமொத்தம் ரூபா 6,130,000 பெறுமதியுடையதான 05 வாகனங்கள் கடந்த 02 தொடக்கம் 06 ஆண்டுகள் வரை பழுதடைந்த நிலையில் திருத்தம் செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைமன்னாரில் நிர்மாணிக்கப்பட்ட பூங்காவினை உரியவாறு பராமரித்துப் பயன்பாட்டுக்கேற்ப மாற்றியமைக்க சபை தவறியிருந்தது.

(இ) பழுதடைந்த நிலையிலுள்ள சபைக்கு உரித்தான 06 வாகனங்களினை திருத்தம் செய்து பராமரிக்க சபை தவறியிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளால் எவ்வித முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமானங்கள் | பிரதேச சபையினது நிர்வாக எல்லைக்குள் காணப்படும் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதனவரி அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பெறவேண்டியக ணக்குகள் | சபைக்கு வருமதியாகவுள்ள அரசிறை மற்றும் செயன்முறைக் கட்டணங்களை வருமானப் பரிசோதனையினை மேற்கொண்டு அறவீடு செய்ய தவறியமை. |
| (இ) | சொத்துக்கள் | சபைக்கு சொந்தமான காணி கட்டடங்கள் வீதிகள், சேமக்காலைகள் மற்றும் விலங்கு அறுமனை போன்றவற்றின் உரிமைப் பத்திரங்களை ஆவணப்படுத்தத் தவறியமை. |
| (ஈ) | கணக்கீடு | பொதுப் பேரேடு மற்றும் பிரதான பேரேடுகளை நாளதுவரைப்படுத்தி பராமரிக்கத் தவறியமை. |